தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 15-3-2016

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## கம்பு நல்ல விலை பெறும்

நாட்டின் இரண்டாவது மிக முக்கிய தானியமாகவும் மற்றும் மானாவாரி நிலபகுதிகளில் பயிரிட ஏற்றதகாவும் கம்பு விளங்குகிறது. இந்தியாவில், 2014-15ம் ஆண்டு 71.18 இலட்சம் எக்டரில் கம்பு பயரிடப்பட்டு 90.53 இலட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது (பொருளாதராம் மற்றும் புள்ளியியல் இயக்குனரகம்) இராஜஸ்தான், மகாராஷ்டிரா, ஹரியானா, குஜராத் மற்றும் உத்திரபிரதேசம் ஆகியவை கம்பு சாகுபடி செய்யும் முக்கிய மாநிலங்களாகும், தமிழ்நாடு, கம்பு உற்பத்தித் திறனில் முதலிடத்தை பெற்றுள்ளது.

தமிழ்நாட்டில், கம்பு மே - ஜுன் மற்றும் அக்டோபர் - நவம்பர் ஆகிய இரண்டு பருவங்களில் பயரிடப்படுகிறது. கம்பு, 2014-15ஆம் ஆண்டில் 0.59 இலட்சம் எக்டரில் பயிரிடப்பட்டு 1.71 இலட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இதன் உற்பத்தி திறன் எக்டருக்கு 2.89 டன்களாகும். இது கடந்தாண்டை விட பரப்பளவில் 9 சதவிகிதம் மற்றும் உற்பத்தியில் 46 சதவிகிதம் அதிகமாகும். கம்பு முக்கியமாக கஞ்சி, பாஸ்தா மற்றும் கம்மஞ்சோறு போன்ற பல்வேறு உணவு வகைகளாகவும் கால்நடை மற்றும் கோழி தீவனம், ஸ்டார்ச் தொழில் துறையிலும் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவு பொருட்கள் தயாரிப்பதற்காகவும் பயன்படுகிறது.

கம்பு விவசாயிகள் விற்பனை முடிவுகளை எடுக்க ஏதுவாக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில், உள்ள வேளாண் மற்றும் ஊரகமேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும், வேளாண் விற்பனைத் தகவல் மற்றும் வணிக ஊக்குவிப்பு மையத்தின் பின்புல அலுவலகம், விழுப்புரம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் கடந்த 13

ஆண்டுகளாக நிலவிய கம்புவின் விலை மற்றும் வர்த்தகர்களிடம் ஆய்வு முடிவுகளின் அடிப்படையில் கம்புவின் பண்ணை விலைவரும் *2016* ஏப்ரல் - மே மாதங்களில், ஒரு குவிண்டாலுக்கு ரூ.*2100 - 2300* வரை இருக்கும் எனக் கணிக்கப்பட்டுள்ளது. எனவே, விவசாயிகள் மேற்கூறிய சந்தை ஆலோசனைகளின் படி விற்க அறிவுறுத்தப்படுகிறார்கள்.

**<u>மேலும் விவரங்களுக்கு,தொடர்பு கொள்ளவும்:</u>**

*உள்நாட்டுமற்றும் ஏற்றுமதிசந்தைத்  தகவல் மையம்,*
*வேளாண் மற்றும் ஊரகமேம்பாட்டுஆய்வு மையம்,*
*தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்,*
*கோயம்புத்தூர் - 641 003.*
*தொலைபேசி- 0422-2431405*

**<u>மேலும் தொழில் நுட்பவிவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்:</u>**

*பேராசிரியர் மற்றும் தலைவர்,*
*சிறுதானியங்கள் துறை,*
*தாவர இனவிருத்திமற்றும் மரபியல் மையம்,*
*தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்,*
*கோயம்புத்தூர் - 641 003.*
*தொலைபேசி- 0422-2450507*

*உதவி மக்கள் தொடர்பு அலுவலர்*